பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி சென்னை – 4

07 08 2025 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசு துணைத்தலைவர் வேட்பாளரை தேர்வு செய்யும் அதிகாரம் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

- நாட்டின் மின்உற்பத்தி வரும் 2031-32-ஆம் ஆண்டுக்குள் 870 ஜிகாவாட்டாக அதிகரிக்கும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

- நாடு முழுவதும் ஆயிரத்து 250 கேலோ இந்தியா விளையாட்டு பயிற்சி மையங்கள் தொடங்கப்படும் என்று மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

- கம்போடியாவும் – தாய்லாந்தும் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- இலங்கை சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dhyan Santosh இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<>>>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணியின், குடியரசு துணைத்தலைவர் வேட்பாளரை தேர்வு செய்யும் அதிகாரம் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித்தலைவர்கள் கூட்டம் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் குடியரசு துணைத்தலைவர் தேர்தலில், வேட்பாளரை தேர்வு செய்வதற்கான அதிகாரம் பிரதமருக்கும், மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டாவுக்கும் வழங்கப்பட்டதாக

மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் ஒருமனதாக இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையே, குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 21-ஆம் தேதி கடைசி நாளாகும்.

அதற்கு அடுத்த நாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

மனுக்களை விலக்கிக்கொள்ள வரும் 25-ஆம் தேதி கடைசி நாளாகும்.

போட்டி இருக்கும் பட்சத்தில் அடுத்த மாதம் ஒன்பதாம் தேதி தேர்தல் நடத்தப்பட்டு, அன்றைய தினமே வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும்

<<<<<<<>>>>>>>

நாட்டின் மின்சார உற்பத்தி வரும் 2031-32-ஆம் ஆண்டுக்குள் 870 ஜிகாவாட்டாக அதிகரிக்கும் என்று மத்திய எரிசக்தித்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபத் நாயக் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், கடந்த ஜூன் மாதம் வரையிலான காலத்தில் நாட்டின் மின் உற்பத்தி 485 ஜிகாவாட்டாக உள்ளது என்று கூறினார்.

எனினும், அதிகரித்து வரும் தேவையை கருத்தில்கொண்டு மின் உற்பத்தியை அதிகரிக்க திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

விரைவான பொருளாதார வளர்ச்சி, வீடுகளுக்கான மின்தேவை அதிகரிப்பு, நகரமயமாதல் போன்ற பல்வேறு காரணங்களால் மின்சாரத்திற்கான தேவை அதிகரித்து வருவதாக திரு ஸ்ரீபத் நாயக் கூறினார்.

<<<<<<<>>>>>>>

பிரதமரின் உணவு பதப்படுத்துவதற்கான குறு உற்பத்தி மையங்களுக்கு அதிக அளவில் கடனுதவி வழங்கப்பட்டு வருவதாக மத்திய உணவு பதப்படுத்துதல் துறை இணையமைச்சர் திரு ரவ்னீத் சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் இதனை தெரிவித்த அவர், நாடு முழுவதும் இத்திட்டத்தின்கீழ், ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 557 பேருக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும், தமிழகத்தில் மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 584 பேர் கடனுதவி பெற்று பயனடைந்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், தமிழகத்தில் தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு 890 கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

காய்கறி மற்றும் பழங்கள், தானிய வகைகள், கடல்சார் உணவு உற்பத்தி தொழிலில் ஈடுபட்டுள்ள எட்டு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு ரவ்னீத் சிங் கூறியுள்ளார்

<<<<<<<>>>>>>>

வெளிநாடுகளில் கல்வி பயின்றுவரும் இந்திய மாணவர்களின் குடியுரிமை தொடர்பான விவகாரங்கள் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் கவனத்தில் கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் எழுப்பூர்வமாக அளித்த பதிலில் இதனை தெரிவித்த அவர், அமெரிக்காவில் கல்வி பயின்றுவரும் மாணவர்கள் தொடர்பாக இந்திய தூதரகங்கள் ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதாகவும் விரும்பினால்அவர்கள் மீண்டும் இந்தியாவிற்கு திரும்புவதற்கான ஏற்பாடுகளை செய்வதாகவும் கூறியுள்ளார்.

வெளிநாடுகளில் இந்திய சமூக நலவாரிய நிதியத்தின்மூலம் மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் Shobha Karandlaje கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களுக்காக மத்திய அரசு செயல்படுத்திவரும் திட்டங்களை பட்டியலிட்டார்.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கென சமூக பாதுகாப்பு சட்டம் கொண்டுவரப்பட்டதையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<<<<>>>>>>>

இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி நடப்பாண்டின் முதல் காலாண்டில் 47 சதவீதம் அதிகரித்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மொபைல் போன்கள் ஏற்றுமதி ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து வருவதால் இந்த உயர்வு என இந்திய செல்போன் மற்றும் மின்னணுப் பொருட்கள் சங்கம் வெளியிட்ட தகவல் தெரிவிக்கிறது.

முதல் காலாண்டில் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி ஒரு லட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாகவும் அந்த தகவல் தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் சமையல் எண்ணெய் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்கும், அவற்றின் சில்லரை விலையை கட்டுப்படுத்தவும் மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கடந்த 2006-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உணவு பாதுகாப்பு மற்றும் தர நிலைகள் சட்டத்தில் முந்தைய விதிமுறைகளில் திருத்தம் கொண்டுவரப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உள்நாட்டு உற்பத்தி மற்றும் இறக்குமதி, இருப்பு நிலைகளை சரிசெய்வதற்கு இந்த திருத்தம் வழிவகை செய்வதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

கைத்தறித்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி விடுத்துள்ள செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கைத்தறிப் பொருட்களின் ஏற்றுமதி 2 1 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, தமிழகத்தை சேர்ந்த விவசாயிகளுடன் இன்று கலந்துரையாடியதாக பிரதமர் தமது சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

உற்பத்தித்திறனை ஊக்குவிக்கவும், வேளாண் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதிலும் அவர்களின் அனுபவம் குறித்து கேட்டறிந்தது உற்சாகம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் ஆயிரத்து 250 கேலோ இந்தியா விளையாட்டு பயிற்சி மையங்கள் தொடங்கப்படும் என்று மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதிலில், கடந்த ஐந்தாண்டுகளில் நாடு முழுவதும் இளைஞர்கள் சர்வதேச விளையாட்டுகளில் பங்கேற்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதகவும் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

கலாச்சாரத்துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கடந்த நிதியாண்டில் 3 ஆயிரத்து 2 6 0 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கூறினார்.

நடப்பு நிதியாண்டில் இது 3 ஆயிரத்து 3 6 0 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் உள்ள Waziristan மாகாணத்தில் காவல்துறையினர் வாகனத்தை குறிவைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் இரண்டு பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

Wana என்ற இடத்தில் சென்ற வாகனத்திற்கு அருகே சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததாகவும், காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

<<<<<<<>>>>>>>

ரஷ்யாவுடன் நீண்டகால நல்லுறவை இந்தியா கொண்டிருப்பதாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

மாஸ்கோவில் அந்நாட்டு பாதுகாப்பு கவுன்சில் தலைவர் Sergei Shoigu –வை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ரஷ்யா உடனான நல்லுறவுகள் மதிப்பு மிகுந்தவை என்று கூறினார்.

இருநாடுகளுக்கும் இடையே உயர்மட்ட அளவிலான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுவதாகவும், இதன்மூலம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புதின் விரைவில் இந்தியாவுக்கு வர உள்ளதாகவும் திரு அஜித் தோவல் கூறினார்.

<<<<<<<>>>>>>>

எல்லைப்பிரச்சினை காரணமாக, போரில் ஈடுபட்ட கம்போடியாவும் – தாய்லாந்தும் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

கோலாலம்பூரில் நடைபெற்ற இரு நாடுகளின் எல்லை தொடர்பான குழுக்கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

பிராந்திய அளவில் அமைதியை ஏற்படுத்தவும், சூழ்நிலையை தொடர்ந்து கண்காணிக்கவும் இருதரப்பிலும் பேச்சு நடத்தி, அதில் உடன்பாடு ஏற்பட்டது.

போரின்போது கைது செய்யப்பட்ட வீரர்களை சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு உட்பட்டு நடத்துவது எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மேலும், இருதரப்பு பேச்சுவார்த்தையை தொடர்ந்து மேற்கொள்ளவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

எனினும், தாய்லாந்தின் சட்ட ரீதியிலா அச்சுறுத்தல் ஆதாரமற்றது என்பதால், அதனை நிராகரிப்பதாக கம்போடியா தெரிவித்துள்ளது.

அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தையை ஒரு மாதத்திற்குள் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இலங்கை சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dhyan Santosh இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-15, 21-12 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Sai nachiketh Bhatraju -ஐ வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Aadhira Rajkumar 21-14, 21-18 என்ற செட் கணக்கில், Prashansa Bonom-ஐ வென்றார்.

<<<<<<<END>>>>>>>>